**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP.No.28/2022**

**2025ம் வருடம் பிப்ரவரி மாதம் 6ம் நாள் வியாழக்கிழமை**

ம.சா.2 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன் படி உதவியாளர் திரு.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராணி | த/பெ | சபரிமலை |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:-**

நான் இந்த மனுவின் 5வது மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்றுமனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

எனது நிரூபண வாக்குமூலத்திற்கு தகவல் எனது அக்கா உமா தான் கூறினார். எனது அப்பா இறந்த போது அவருக்கு சுமார் 65 வயது இருக்கும். எனது அப்பா விபத்து சமயத்தில் வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல அவர் விவசாயம் செய்து வந்தார். விபத்து நடந்த போது எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் தற்பொது முத்தனேந்தலில் எனது கணவர் வீட்டில் வசித்து வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் செய்களத்தூரில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனது தந்தை வீட்டு முகவரி ஆகும் நா்ன தற்சமயம் முத்தனேந்தலில் வசித்து வருவதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் அதனால் விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய

தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தை தான் சாலை விதிகளை கடைபிடிக்காமல் கவனக்குறைவாக சென்று



விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மகேஷ் என்பவர் இந்த வழக்கில் எதற்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் அவர் தான் எனது அப்பா மீது மோதி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் ஆவார். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் அந்த இருசக்கர வாகனத்தை நாகர்கோவிலில் உள்ள வர்சா மோட்டார்ஸ் என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஒரு இளவர்தான் ஓட்டி வந்தார் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேன் அந்த இளவரின் தந்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. எனது கணவர் கூலிவேலை பார்த்து வருகிறார். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் நல்ல வேலை பார்த்து நல்ல வருமானம் ஈட்டிவருகிறார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது அண்ணன் ராஜ்குமார் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரியல்ல இங்கு தான் இருந்தார். நான் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் விற்பனை செய்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு முறையான காப்பீடு அமலில் உளளதால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை விபத்திற்கு முன்பே விற்பனை செய்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாராா் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல அதனால் 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் அதனால் விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் சாலையை கடக்கும் போது சாலையின் இருபுறம் பார்த்த பின்பு கடக்க வேண்டும் என்றால் சரிதான். எனது அப்பா சாலையை கடந்த போது விபத்து ஏற்பட்டது. எனது அப்பா கவனமில்லாமல் சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. <u>என்னிடம் காடடப்படுவது எனது அப்பாவின் விபத்து பதிவேடு என்றால சரிதான்</u>

அது எ.ம.சா.ஆ.1 ஆகும். மேற்படி ஆவணத்தில் எனது அப்பாவின் வயது 70 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் எனது அப்பாவிற்கு 65 வயது



தான் இருக்கும். எனது தந்தைக்கு விபத்து சமயத்தில் 70 வயது என்பதால் அவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வந்தார் நாங்கள் தான் அவரை பராமரித்து வந்தோம் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் இளவர் என்பதை தெரிந்து கொண்டேன். இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் இளவர் என்பதால் அவரின் தந்தை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் பெருங்கரை கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி மகேந்திரனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இளவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி பாலிசி விதிமுறை மீறப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல. இளவர் இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் தான் நஸ்ட ஈடுவழங்க கடமைபட்டுள்ளார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
மானாமதுரை